1979 மார்ச் 20]

காவிரி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா எண் 468—திரு. எஸ். வி. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) காவிரி நதியின் குறுக்கே முசிரி இணைப்புப் பாலம் கட்டும் வேலை தொடங்கி மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் இன்னும் அதைக் கட்டி முடிக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன ?

(ஆ) அது எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) 1972-ம் ஆண்டு மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும், வேலையின் அளவு கூடியதினாலும், கான்கிரீட் விட்டங்கள் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் செய்ய வேண்டி யுள்ளதால் அதிக கால வரை தேவைப்படுகிறது.

(ஆ) இப்பாலம் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ம் நாளில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். வி. இராமசாமி : இந்தக் காவிரி பாலத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு என்று அறிய முடியுமா ? அப்பாலம் அரசுத் துறையினால் கட்டப்பட்டதா ? தனியாரால் கட்டப் பட்டதா ? தந்தை பெரியாருடைய நினைவாக இந்தப் பாலத் திற்கு தந்தை பெரியார் பாலம் என்றோ, பேரறிஞர் அண்ணா பாலம் என்றோ பெயர் வைக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவ ரவர்களே, இப்பால வேலையின் மதிப்பீடு ரூ. 139 இலட்சம். தனியாரால்தான் இதனுடைய கான்ட்ராக்ட் வேலை செய்யப் படுகிறது. தந்தை பெரியாருடைய பெயரை இந்தப் பாலத் திற்கு வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய நல்ல ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பெறும் டிராக்டர் களுக்கான வரி.

வினா எண் 469—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விவசாயத்திற்குப் பயன்படுத்தும் தனியாரின் டிராக் டர்கள் கொண்டே கிணறு வெட்டும் கம்பர்ஷனை இயக்கி கிணறு வெட்டி வாடகை பெற்று வருவதை அரசு அறியுமா ?

(ஆ) இதற்கு அனுமதி உண்டா ?

(இ) ஆம் எனில் இதற்கு வரி விதிப்பும் வருமான தொகை யும் யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) வழக்கமாக விதிக்கப்படும் மோட்டார் வாகன வரியில் மூன்றில் ஒரு பாகம் வரியாக வசூலிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு வருமானம் ரூ. 1,01,964 ஆகும்.

அரசு ஊழியர்களின் ஒய்வு பெறும் வயது.

வினா எண் 480—திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசு ஊழியர்கள் வேலைக்கு சேரும் வயது வரம்பு 25 லிருந்து 26 ஆக சர்வீஸ் கமிஷன் உயர்த்தப்பட்டுள்ளதற்கிணங்க ஒய்வு பெறும் வயது வரம்பினையும் 55-லிருந்து 56 ஆக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :— இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, முன்னாலே அரசு பணிகளில் அமர்ந்துள்ள அரசு பணியாளர்களில் பலர் அவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிற 55 வயதை தாண்டியும்கூட மேலும் அவர்களின் பணிக்காலம் நீட்டப்பட்டு வருதவாக சில நேரங்களில் அறிவிக்கப்படுகிறது. புதிதாக வேலையற்றிருக்கும் பலருக்கு, இதனால் அவர்களுக்கு வேலை கிடைக்கும் காலமும் நீட்டப்படுகிறது. இந்த முறையை கைவிட்டு, சரியான வயது வரம்பில் அவர்களை பணிக்காலத்திலிருந்து ரிடையர் செய்து நல்ல முறையில் பணியாற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இதே யோசனையின் அடிப்படையில்தான் எவ்வளவுக்கெவ்வளவு குறைந்த அளவினருக்கு பணிக்காலம் நீடித்து தர முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு நீட்டித் தரப்படுகிறது. அதுவும் அவசியமான காலங்களில் மட்டும்தான் நீட்டிக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அரசுப் பணிகளில் உள்ளவர்களில் சிலர் தங்கள் பணிக்காலம் முடியும் முன் வாலன்டரி ரிடையர்மென்டில் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் காந்திமதி அம்மாள் என்கிற ஒரு பணியாளர் அவர் டிபுடி ரைக்டர் கல்வித்துறை அவரைக் கூட